**செ. கு. எண்**:264 **நாள்**:20.12.2011

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

அறிக்கை –20 .12. 2011

விழுப்புரம் மாவட்டம், செஞ்சி வட்டம், அத்தியூர் கிராமம், குளக்கரை அருகில் 19.12.2011 அன்று செஞ்சியிலிருந்து பொன்னங்குப்பம் நோக்கி சென்றுக் கொண்டிருந்த அரசு பேருந்து, அதே கிராமத்தைச் சேர்ந்த திரு. ராஜதுரை என்பவரது மகன், ஆறாம் வகுப்பு படிக்கும் மாணவன் சூரியா மீது மோதியதால், அம்மாணவன் படுகாயமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார் என்ற செய்தியை அறிந்து நான் மிகவும் துயரமடைந்தேன்.

இவ்விபத்தில் அகால மரணமடைந்த மாணவன் சூரியாவின் குடும்பத்தினருக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும், மாணவன் சூரியாவை இழந்து வாடும் அவர்தம் குடும்பத்திற்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து ஒரு லட்சம் ரூபாய் வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழக முதலமைச்சர்

**வெளியீடு: –**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை.**